ஜீவபலி. . . as living sacrifices…

Praise the Lord: **கர்த்தர் நம்மை ஆட்கொண்டு ஆசீர்வதிப்பாராக.**

ஜூன் மாதத்திலே 15வது ஆண்டு நிறைவு ஆராதனைகளை சிறப்பாக நடத்தி முடிக்க கர்த்தர் கிருபை செய்தார். எல்லா ஆராதனைகளிலும் கலந்து கொள்ளவும் ஊழியங்களிலே உற்சாகத்தோடு ஈடுபடும் நாம் அனைவரும் பல புதிய காரியங்களை மேலும் மேலும் கற்று வருகிறோம். இவைகளை நமது வாழ்க்கையில் கிறிஸ்துவின் மகிமைக்காக பயன்படுத்த நம்மை கர்த்தருக்கு ஒப்புக்கொடுப்போம். அவரல்லாமல் நம்மாலே ஒன்றும் செய்யமுடியாது என்று வசனம் சொல்கிறது. ஆமென்.

கர்த்தருக்காக ஆலயத்தைக் கட்டி, கர்த்தரை ஆராதனை செய்து அவருடைய வார்த்தைகளை கைக்கொள்ள பிரயாசப்பட்ட அந்த காலத்து மக்களுக்கும்,

அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம் செய்து, நீங்களே தேவனுடைய ஆலயம் என்று சொன்ன கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை நமது உள்ளத்திலே ஏற்றுக் கொண்ட இந்த காலத்து நமக்கும் பெரிய வித்தியாசம் இருப்பதை நாம் நமக்குள்ளே உணரவேண்டும். அப்பொழுது கிறிஸ்துவின் அன்பு நம்மை நெருக்கி ஏவுகிறதை நாம் ஒவ்வொரு நாளும் நமக்குள்ளே உணரலாம். ஆமென்.

நமக்குள்ளே கிரியைசெய்கிற வல்லமையின்படியே நமக்கு செய்யவல்லவராகிய கிறிஸ்துவுக்கு நம்மை ஜீவபலியாக ஒப்புக்கொடுத்து ஜெபிப்போம்.

## Let us Pray

ரோமர்/Romans 11:36 - 12:1 (**பக்கம் 221**)

சகலமும் அவராலும் அவர் மூலமாயும் அவருக்காகவும் இருக்கிறது; அவருக்கே என்றென்றைக்கும் மகிமையுண்டாவதாக. ஆமென்.

அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் *பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான* ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை.

Therefore, I urge you, brothers, in view of God's mercy, to offer your bodies as living sacrifices, *holy and pleasing to God*—this is your spiritual act of worship. (NIV)

**Sacrifice**: an offering to God, **பலி**, the giving up of some comfort or anything dear for the sake of general good.

**தியாகம்**: பிறருடைய நலனுக்காகத் தன் சொந்த நலனை அல்லது தன்னை இழக்கத் துணியும் செயல்.

ஏதாவது ஒரு காரியத்தில் நாம் நம்மை விட்டுக் கொடுத்து ஒரு காரியத்தை செய்வது, இந்த உலக வாழ்க்கையிலே தியாகம் என்று சொல்வார்கள். (*தியாகி*)

வேதம் இங்கு சொல்லக்கூடிய ஜீவபலி வார்த்தைக்கு முன் உள்ள 2 வார்த்தைகளை கவனியுங்கள்.

*பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான. . .* இந்த இரண்டும் சேர்ந்துள்ள ஒரு ஜீவபலி.

தேவன் பரிசுத்தர். அவருக்குப் பிரியமானதெல்லாம் பரிசுத்தமானது.

*முதலாவதாக தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள். என்று வேதம் சொல்கிறது.*

*தேடிக்கண்டுபிடித்தபிறகு அதற்கு ஒப்புக்கொடுத்து வாழ்கிறவர்கள் எத்தனைபேர்கள்? சிந்தித்துப்பாருங்கள்.*

*பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான* ஜீவபலியாக நம்மை ஒப்புக்கொடுக்க பிரயாசப்படும் பொழுது, இரக்கத்தில் ஐசுவரியமுள்ள தேவன் நமக்கு ஒத்தாசை செய்வார்.

நாம் வாழ்க்கையிலே பெரும்பாலும் மற்றவர்களை பார்த்து பார்த்து நமது பெலவீனங்களிலேயே வாழ்வதற்கு ஒரு வழியை வகுத்துக் கொள்கிறோம்.

பல சந்தர்ப்பங்களிலே, நமது பெலவீனங்களை நீக்க வழிதேடாமல், பெலவீனங்களிலே வாழ நாமே வழிவகுத்துக் கொள்கிறோம். சிந்தித்துப் பாருங்கள்.

*அதற்கு வேதத்தையும்கூட ஆதாரமாக பலர் பயன்படுத்துவார்கள். . .*

பல கிறிஸ்தவ நண்பர்கள் . என்னிடம் சொல்வதுண்டு. ..

வேதத்திலே எவ்வளவோ பேர்களுடைய பெலவீனங்ளை குறிக்கப்பட்டிருக்கிறது. அது மனிதர்களின் பெலவீனம். அதைப் போக்க நம்மாலே முடியாது.

வேதத்திலே குறிப்பிட்டுள்ள பெலவீனங்கள் நம்மை பெலவீனப்படுத்திக்கொள்ள அல்ல, தேவனாலே அழைக்கப்பட்டிருந்தாலும் நாம் மனிதன் தான் என்றும், நம்மை நமது மாம்ச சிந்தைகளே பெலவீனப்படுத்தும் என்றும் . . .அதலிருந்து நாம் விடுபடவேண்டும் என நமக்கு ஒரு எச்சரிப்பு என்று ஏன் நாம் எடுத்துக் கொள்ளக்கூடாது?.

பெலவீனங்களிலிருந்து விடுபட மனிதனாலே முடியாததுதான். தேவனாலே எல்லாம் கூடும்.

அதிலிருந்து விடுவிக்க தேவனே கிறிஸ்துவின் முலமாக நமக்கு மாதிரியைக் காண்பித்திருக்கிறார்.

எபிரெயர்/Hebrews 9:14 (பக்கம் 305)

நித்திய ஆவியினாலே தம்மைத்தாமே பழுதற்ற பலியாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுத்த கிறிஸ்துவினுடைய இரத்தம் ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியஞ்செய்வதற்கு உங்கள் மனச்சாட்சியைச் செத்த கிரியைகளறச் சுத்திகரிப்பது எவ்வளவு நிச்சயம்! (எபி. 9:14)

How much more, then, will the blood of Christ, who through the eternal Spirit offered himself unblemished to God, cleanse our consciences from acts that lead to death, so that we may serve the living God! (NIV)

*தியானிக்க தியானிக்க கிறிஸ்துவின் அன்பு உங்களை நெருக்கி ஏவும். . ஆமென்.*

நமது கஷ்டமான கடந்த நாட்கள் நமது வாழ்க்கையிலே இருக்குமானால். . . அதை மிகவும் அருமையாக மற்றவர்களுக்கு பல தடவைகள் சொல்லி, இப்படிப்பட்ட கஷ்டமான சூழ்நிலைகளிலிருந்து கர்த்தர் என்னை மீட்டு, ஆசீர்வதித்திருக்கிறார் என்று கர்த்தரின் நாமத்தை மகிமைப்படுத்தி சாட்சியாகக் கூட சொல்வோம். இதிலே நமக்கு உற்சாகம் அதிகமாக இருக்கும். இது நல்லது தான்.

அதே சமயம் நமக்கு கர்த்தர் இப்பொழுது கொடுத்திருக்கும் உலக ஆசீர்வாதங்களை மற்றவர்களுக்காகவோ, தங்களின் உற்றார் உறவினர்களுக்காகவோ கொஞ்சம் விட்டுக் கொடுத்து ஒரு சிறிய தியாக உணர்வோடு வாழ முயற்சிப்பதில் உற்சாகம் குறைவாகத்தான் இருக்கும். சிந்தித்துப் பாருங்கள்.

*இது மனிதர்களான நமக்குள் இருக்கும் பெலவீனம்.*

*கஷ்டமான காலக்கட்டங்களில் நமக்கு வாய்ப்புக்கள் பல இல்லை. No choice. . .*

*உலக ஆசீர்வாதமான சூழ்நிலைகளிலே வாய்ப்புக்கள் பல உள்ளன.*

*நாம்தாம் தெரிந்தெடுக்கவேண்டும். Choice is ours. . . think about that. சிந்தியுங்கள்.*

*பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான* ஜீவபலி. . .

மனிதன் பரிசுத்தமில்லாத இன்னொரு மனிதனுக்காக தியாகம் செய்ய முடியாமலிருந்தாலும் மனிதன் பரிசுத்தரான கிறிஸ்துவுக்காக தியாகம் செய்ய என்ன தடை? சிந்தித்துப் பாருங்கள்.

நமக்காக தம்மைத்தாமே வெறுமையாக்கின கிறிஸ்து சொல்கிறார்.

. . . ஒருவன் என் பின்னே வர விரும்பினால் அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை அநுதினமும் எடுத்துக் கொண்டு, என்னைப் பின்பற்றக்கடவன். (லூக்கா 9:23)

"If anyone would come after me, he must deny himself and take up his cross daily and follow me. (NIV)

தான் ஆடவில்லையென்றாலும் தன் சதை ஆடும்.. .. என்பது பழமொழி

மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும், ஆவி மாம்சத்துக்கு விரோதமாகவும் இச்சிக்கிறது; நீங்கள் செய்யவேண்டுமென்றிருக்கிறவைகளைச் செய்யாதபடிக்கு, இவைகள் ஒன்றுக்கொன்று விரோதமாயிருக்கிறது. (கலா. 5:17)

For the sinful nature desires what is contrary to the Spirit, and the Spirit what is contrary to the sinful nature. They are in conflict with each other, so that you do not do what you want. (NIV)

தன்னைத்தான் வெறுக்கும்போது,. . . நம்மை உலகம் இச்சிக்காது. கிறிஸ்து நம்மிலே பூரணப்படுவார்.

இதே கலாத்தியர் அதிகாரத்திலேதான் ஆவியின் கனிகளைப்பற்றி 22,23 வசனங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த வசனத்திற்கு அடுத்து ஒரு வசனம் உள்ளது.

**<u>கிறிஸ்துவினுடையவர்கள்</u>** தங்கள் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள். (கலா. 5:24)

**<u>Those who belong to Christ Jesus</u>** have crucified the sinful nature with its passions and desires. (NIV)

*கிறிஸ்துவுனுடையவர்கள் (கிறிஸ்தவர்கள் அல்ல) என்ற வார்த்தையை சிந்தியுங்கள்.*

கனிகொடுக்கிறவர்களாக நாம் வாழவேண்டுமென ஒரு <u>ஞாயிறு தேசெய்தியில் தியானித்தோம்.</u> அதை செய்ய முடியாது இந்த உலகத்தின் சூழ்நிலைகள் மனிதர்களின் சூழ்நிலைகள் நம்மை சோர்வடையச் செய்கிறதே என் கலங்கத்தேவையில்லை. . .. . . .

எனக்கு ஒத்தாசை வரும் பர்வதங்களுக்கு நேராக என் கண்களை ஏறெடுக்கிறேன். வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தரிடத்திலிருந்து எனக்கு ஒத்தாசை வரும்.

I lift up my eyes to the hills—where does my help come from?

My help comes from the LORD, the Maker of heaven and earth.

என்று அதற்கு முதல்நாளே <u>உபவாசக் கூட்ட தேவசெய்தியிலே</u> தியானித்தோம்.

தியானித்த வசனங்களை மீண்டும் மீண்டும் தியானித்து கர்த்தருக்குள் உற்சாகப்படுவோமானால், என்றென்றும் நிலைத்திருக்கும் பர்வதமாக நாம் கர்த்தருடைய ஒத்தாசையை பெறுவோம்.

Tornotoவில் உள்ள மக்களெல்லாம் இரட்சிக்கப்படவேண்டும் என்ற விருப்பமுள்ளது.
**நாம் இதுவரை செய்து வருகிற ஒவ்வொரு காரியத்தையும் இன்னும் உற்சாகத்தோடு செய்வோம்.**
திருச்சபைக்கு அருகிலுள்ள தமிழ்மக்களுக்கு விருப்பத்தோடும் ஜெபத்தோடும் விடாமுயற்சியோடும் தெரிவித்து அழைப்பதற்கு இன்னும் உற்சாகத்தோடு நாம் ஒவ்வொருவரும் செயல்படவேண்டும்.
*மற்றவர்கள் என்ன செய்கிறார்கள் என்று பாராமல்,*
*நான் என்னைமீட்ட கிறிஸ்துவுக்காக என்ன செய்யலாம் என்று சிந்திப்போம். செயல்படுவோம்.*

நாங்கள் விரும்புகிறோம் ஆண்டவரே. . .நாங்கள் உமது கிருபையுடன் ஓடுகிறோம் ஆண்டவரே. .
ஆண்டவரே, நீர் உமது இரக்கத்தினால் எங்கள் பிரயாசத்தை ஆசீர்வதியும். என்று ஜெபிப்போம்.
விரும்புகிறவனாலும் அல்ல, ஓடுகிறவனாலும் அல்ல, இரங்குகிற தேவனாலேயாகும்.

மீண்டுமாக ரோமர்/Romans 12:1 (பக்கம் 221)

அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் *பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான* ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை.

புத்தியுள்ள ஆராதனை என்ற வார்த்தை ஆங்கிலத்தில். . .
spiritual act of worship (NIV), truly the way to worship him(KJV),
reasonable (rational, intelligent) service and spiritual worship. (AMP)
..to make a decisive dedication of your bodies [presenting all your members and faculties] as a living sacrifice, holy (devoted, consecrated) and well pleasing to God, which is your reasonable (rational, intelligent) service and spiritual worship. (AMP)

*இப்படிப்பட்ட ஆராதனை நாம் ஒவ்வொருவரும் செய்ய எப்படி முயற்சிப்பது???*

2 கொரிந்தியர்/2 Corinthians 7:1 (பக்கம் 250)

இப்படிப்பட்ட வாக்குத்தத்தங்கள் நமக்கு உண்டாயிருக்கிறபடியினால், பிரியமானவர்களே, மாம்சத்திலும் ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க, நம்மைச் சுத்திகரித்துக்கொண்டு, பரிசுத்தமாகுதலைத் தேவபயத்தோடே பூரணப்படுத்தக்கடவோம்.
Since we have these promises, dear friends, let us purify ourselves from everything that contaminates body and spirit, perfecting holiness out of reverence for God. (NIV)

**தேவபயத்தோடே நம்மை சுத்திகரித்துக்கொள்ள கர்த்தருடைய ஒத்தாசையை நாடுவோம்.**

*சகல பரிபூரணமும் கிறிஸ்துவுக்குள்ளே வாசமாயிருக்கவும்,*
*கிறிஸ்து சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி,*
*பூலோகத்திலுள்ளவைகள் பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் அவர் மூலமாய் தமக்கு ஒப்புரவாக்கிக்கொள்ளவும் தேவனுக்குப் பிரியமாயிற்று.*

*பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான* ஜீவபலியாக நம்மை ஒப்புக்கொடுக்க பிரயாசப்படும் பொழுது, இரக்கத்தில் ஐசுவரியமுள்ள தேவன் நமக்கு ஒத்தாசை செய்வார்.
ஒத்தாசை அவரிடமிருந்து வருமென்று விசுவாசித்து, அவரை நோக்கிப்பார்த்து அனைவரும் எழுந்து நின்று கர்த்தரை ஸ்தோத்திப்போமாக. .. அவருடைய நாமத்தை துதித்து மகிமைப்படுத்தி ஜெபிப்போமாக.

## Let us Pray